**தேதி :** 20.01.2026 **SC.No. :** 401/2024 PW :10 சுதந்திராதேவி

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

புகார் மனு எங்கு வைத்து யாரால் கைப்பட எழுதப்பட்டது என துலங்காது என்றால் சரியல்ல. என்னுடைய புலன் விசாரணையில் இந்த விபரம் தெரிய வந்ததா? என்றால் இல்லை. தனியாக சாட்சிகளிடம் நான் வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். பிக் அப் வாகனத்தின் உரிமையாளர் யார் என்று வழக்கு கோப்பில் துலங்காது. அ.சா.1 பயன்படுத்தியதாக சொல்லப்பட்ட இருசக்கரவாகனத்தின் உரிமையாளர் யார் என்று என்னுடைய விசாரணையில் துலங்காது என்றால் சரிதான். அ.சா.1 க்கும், எதிரியின் சகோதரருக்கும் இடையே நடந்ததாக சொல்லக்கூடிய இடப்பிரச்சனை தொடர்பாக ஏதேனும் ஆவணங்களை நான் பார்வையிட்டேனா? என்றால் இல்லை. நான் சொல்லியது போல் சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. அ.சா.1 ம், அவருடைய சகோதரரும் எதிரியின் சகோதரரை தாக்கி காயப்படுத்திய வழக்கிலிருந்து தப்பிப்பதற்காக வேண்டி அ.சா.1 ன் தாய்மாமா முத்து ஆசாரியின் அரசியல் செல்வாக்கை பயன்படுத்தி காவல் ஆய்வாளர் சுரேஷ் ஏற்பாட்டின் பேரில் எதிரி மீது இந்த வழக்கு உண்மைக்கு புறம்பாக பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எதிரியின் சகோதரர் பாதிக்கப்பட்ட வழக்கில் எதிரியின் சகோதரருக்கு எதிரி உதவியாக இருந்த காரணத்தினால் அ.சா.1 தயார் செய்த புகார் மனு காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளரிடம் கொடுக்கும் போது, உதவி ஆய்வாளர் விசாரணை செய்து அது பொய்யான புகார் மனு என்று ஏற்க மறுத்து விட்ட சூழ்நிலையில் 108 ஆம்புலன்ஸ் மூலம் சிகிச்சையில் சேர்ந்தால் தானாக குற்ற வழக்கு பதிவு

செய்வார்கள் என்று தெரிந்து கொண்டு காவல் ஆய்வாளர் சுரேஷ் அவர்கள் ஏற்பாட்டின் பேரில் தயார் செய்த இந்த வழக்கினை நான் சரிவர விசாரணை செய்யாமல் ஒருதலைபட்சமாக விசாரணை செய்து இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. அ.சா.1 க்கு வெளிக்காயங்கள் எதுவும் இல்லை என்றால் சரிதான்.

<u>மறுவிசாரணை</u> –

இல்லை.

சாட்சி சென்னை காவல் இணை ஆணையர், கிழக்கு மண்டலம், சென்னை பெருநகரம், எழும்பூர், சென்னை 8 அலுவலக காணொளி அறையில் இருந்து காணொளி மூலம் ஆஜரானார். அவரது வாக்குமூலம் Thiru. Ramachandran, Sub Inspector of Police, Video conference Co-ordinator சென்னை காவல் இணை ஆணையர், கிழக்கு மண்டலம், சென்னை பெருநகரம், எழும்பூர், சென்னை 8 அலுவலகம் என்பவர் முன்னிலையில் ஒருங்கிணைக்கப்பட்டு, இந்த திறந்த நீதிமன்றத்தில் பெஞ்ச் கிளார்க் அவர்களால் பிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.01.21 15:20:45 +0530